# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2001 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2001, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2001, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு: ரூபா 3.50**

# 2001 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 21/2001
4615

**1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கும், அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2001 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பந்தய சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்துக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான வீதங்களில்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்துக்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள அந்தந்தத் தொகைகளுக்குச் சமமாக" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(3) விதிப்பனவின் ஏதேனும் தவணைக்கட்டணமானது தவணை தவறியதாகவுள்ளவிடத்து, அத்துடன்

(அ) தவணைதவறியமை, 1988 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டில் செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டண

றொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, தவணை தவறியவர் தவணைதவறிய தவணைக்கட்டணத்துடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றைத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டும் :—

(i) தவணைதவறிய தவணைக்கட்டணத்தின் பத்து சத வீதத்துக்குச் சமமானவொரு பணத்தொகை ; அத்துடன்

(ii) தவணைதவறிய தவணைக்கட்டணம் எம்மாதத்தில் தவணைதவறியதாகவிருக்கத் தொடங்கியதோ அம்மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் அத்தகைய கட்டணம் செலுத்தப்படாதுள்ளவிடத்து, அது எந்த அடுத்துவரும் ஒவ்வொரு மாதத்தின்போதும் அல்லது எக்காலப் பகுதியின் பாகத்தின்போதும் தவணை தவறியதாகவுள்ளதோ அந்த அடுத்துவரும் ஒவ்வொரு மாதத்தினது அல்லது அக்காலப்பகுதியின் பாகத்தினது பதினைந்தாம் நாளன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் தவணைதவறிய தவணைக் கட்டணத்தின் இரண்டு சதவீதத்துக்குச் சமமான மேலதிகமானவொரு பணத் தொகை :

ஆயின் எவ்வாறாயினும், இப்பந்தியின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை எவ்விடயத்திலும் தவணை தவறிய தவணைக் கட்டணத்தின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது ; அத்துடன்

(ஆ) தவணைதவறியமை, 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற் செலுத்தப்பாற்பாலதான தவணைக்

கட்டணமொன்று தொடர்பிலானதாகவிருக்கு மிடத்து, தவணைதவறியவர், தவணை தவறிய தவணைக் கட்டணத்துடன் சேர்த்து மேலதிகமாக, தவணைக்கட்டணமானது எந்த மாதத்தில் தவணை தவறியதாகவிருக்கத் தொடங்கியதோ அந்த மாதத்தை அடுத்துவரும் ஒவ்வொரு மாதத்தினதும் பதினைந்தாம் நாளன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் அல்லது தவணைக் கட்டணம் எக்காலப்பகுதியின்போது தவணை தவறியதாகவுள்ளதோ அக்காலப்பகுதியின் பாகம் தொடர்பிலும் தவணைதவறிய தவணைக்கட்டணத்தின் முப்பத்து மூன்றோடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான மேலதிகமானவொரு பணத்தொகை :

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின்கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத்தொகை எவ்விடயத்திலும் தவணைதவறிய தவணைக்கட்டணத்தின் நூறு சதவீதத்தை விஞ்சுதலாகாது.

(3அ) ஆணையாளர் தலைமையதிபதி, தவணை தவறியமை நிகழ்ந்த எவையேனும் விசேட சூழ்நிலைகளின் காரணத்தினால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்தைக் குறைத்தல் அல்லது விட்டுவிடுதல் நீதியானதும் ஒப்புரவானதுமாகும் எனத் திருப்திப்படின், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "42 ஆம் பிரிவு அல்லது 43 ஆம் பிரிவின் கீழ்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "42 ஆம் பிரிவினால் அல்லது பிரிவின்கீழ் அல்லது 43 ஆம் பிரிவினால் அல்லது பிரிவின் கீழ்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2001 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பந்தய,**
**சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

ı. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை ப்படுகின்றது :–

**"அட்டவணை** (பிரிவு 2)

**பாகம் I**

தற்கான I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோ ண்டுக்கும் குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு ாத்துகின்ற ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான திப்பனவுத் தொகையானது, இதற்கான II ஆம் நிரையில் ரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குச் மானதாகவிருத்தல் வேண்டும் :–

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | விதிப்பனவுத் தொகை |
| 8 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தியன்று அல்லது அதற்குப் ன்னர் ஆனால் 2001 ஆம் ண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு ன்னர் தொடங்குகின்ற ஒவ் பாராண்டுக்கும் | ஒரு இலட்சம் ரூபா |
| 1 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தியன்று அல்லது அதற்குப் ன்னர் தொடங்குகின்ற ஒவ் பாராண்டுக்கும் | பத்திலட்சம் ரூபா |

**பாகம் II**

தற்கான I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோ ண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ளொருவரினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுத் தாகை, இதற்கான II ஆம் நிரையில் நேரொத்த பதிவிற் றித்துரைக்கப்பட்ட தொகைக்குச் சமமானதாகவிருத்தல் வண்டும் :–

**2001 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | விதிப்பனவுத் தொ |
| 1988 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்திலட்சர் |
| 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | இரண்டரைக் |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.